பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 22 | புதன்கிழமை | 08.10.2025 | அதிர்வு 068

## இலங்கை தொடர்பான

## புதிய தீர்மானத்தை நிராகரித்தது அரசு



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர் மானத்தை அரசு 06

# இலங்கை குறித்த புதிய தீர்மானம்; எப்போதேனும் நீதி கிட்டும் எனும் நம்பிக்கையை விதைத்துள்ளது!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

முன்னைய அரசாங்கங்களுடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டு தெரிவான ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயத்தில் தளர்வுப்போக்கைப் பின்பற்றி வந்தது போல் தெரிந்தாலும், இந்த அரசாங்கமும் ஐ.நாவின் பொறப்புக்கூறல் செயற்றிட்டத்தை நிராகரித்திருப்பதாக விசனம் வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இருப்பினும் நேற்றுமுன் தினம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் இலங்கையில் ஆட்சிப்பீடமேறும் அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலை முடக்கினாலும், ஏதேனுமொரு நாள் நீதியை அடைய முடியும் என்ற சிறுதுளி நம்பிக்கையைப் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் விதைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது. 06

# நாய் குரைப்பதால் சிங்கம் அஞ்சாதாம்

## பொன்சேகாவுக்கு மஹிந்தவின் பேச்சாளர் இப்படி பதிலடி



“மஹிந்த ராஜபக்ஷதான் சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதி பதவிக்குக் கொண்டு வந்தார். பொன்சேகா மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் அவரை உலகில் எந்த நாட்டுக்குக் கொண்டு சென்றாவது பாதுகாக்குமாறு கூறிய தலைவர் தான் மஹிந்த ராஜபக்ஷ. இப்படிபட்ட மஹிந்தவையே பொன்சேகா இன்று கடுமையாக விமர்சித்து வருகின்றார். நாய் குரைப்பதால் சிங்கம் அஞ்சாது.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

அத்துடன், இறுதிப்போரின்போது மஹிந்த ராஜபக்ஷவால் போர் நிறுத்தம் வழங்கப்பட்டது என்பது உட்பட பொன்சேகாவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும் அவர் முற்றாக நிராகரித்தார். 06




அரசியல் சம்பந்தமான உள்வீட்டு விடயங்களை – விவரங்களை – வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதும், அவற்றை அவர்களுக்குத் தெரிவிப்பதும் இந்தப் பத்தியின் வழமையான பணிதான். ஆனால் பல சமயங்களில் அதைச் செய்யப் போனால், தரப்புகளுக்கு இடையில் ‘கொழுவி வைக்கும்’ நாரதர் வேலையை நான் செய்வதாகக் குற்றச்சாட்டு எழும். தவிர்க்க முடியாத இந்தக் குற்றச்சாட்டுப் பிரச்சினையைச் சுமந்தபடிதான் பல விடயங்களை சொல்ல வேண்டி இருக்கின்றது.

அத்தகைய ஒரு விடயம் பற்றிய விவகாரம்தான் இன்று குறிப்பிடப்பட வேண்டியதாக இருக்கிறது.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்திற்கான நியமனத்தின் சட்ட பூர்வ தன்மை குறித்து சபையில் ஆட்சேபனை கிளப்பினார்.

அந்த ஆணையத்தின் ஆணையாளர் நாயகமாக ரங்க திஸநாயக்க தெரிவானமை 06



# மஹிந்தவின் திடீர் போர் நிறுத்தம்; விசாரணை கோரும் பொன்சேகா!

“பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப் புலித் தலைவர்களைத் தப்பிக்க வைப்பதற்காக இறுதிக்கட்டப் போரின்போது மஹிந்த ராஜபக்ஷவால் 48 மணிநேர போர் நிறுத்தம் வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன், 2005 ஆம் ஆண்டு புலிகளுக்கு நிதி வழங்கப்பட்டமை குறித்தும் விசாரணை அவசியம். இதற்காக ஜனாதிபதி விசாரணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“இராணுவத்தினர் தொடர்பில் ராஜபக்ஷக்கள் தற்போது அதிக அக்கறையுடன் கதைக்கின்றனர். என்னை மஹிந்த ராஜபக்ஷ சிறை வைத்ததுகூட தவறு என நாமல் ராஜபக்ஷ கூறி வருகின்றார்.

பிரபாகரன்கூட எமது குடும்பத்தினரை இலக்கு வைக்கவில்லை. நாம் உக்கிர போரில் ஈடுபட்டிருந்த தருணத்தில்கூட படையினரின் குடும்பத்தைப் பிரபாகரன் இலக்கு வைக்கவில்லை. ஆனால், ராஜபக்ஷக்கள் எனது குடும்பத்தினரைக்கூட விட்டுவைக்கவில்லை.

எனக்குக் கீழ் வேலை செய்த படையினர் ஓய்வூதியம் இன்றி வெளியேற்றப்பட்டனர். அவர்கள் வெளியே சென்ற பிறகுகூட அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு இடமளிக்கப்படவில்லை. தடையேற்படுத்தப்பட்டது. இதனால் சிலர் மாரடைப்பு வந்து மரணித்துவிட்டனர். இப்படி செய்த ராஜபக்ஷக்கள்தான் தற்போது படையினருக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறிக்கொள்கின்றனர்.

2009 ஜனவரி 31 முதல் பெப்ரவரி 1 வரை 48 மணிநேரம் போர் நிறுத்தம் வழங்குமாறு மஹிந்த ராஜபக்ஷ அழுத்தம் கொடுத்தார். அந்தக் காலப் பகுதியில் நாம் முல்லைத்தீவை பிடித்துவிட்டோம். புதுகுடியிருப்பையும் மும்முனையில் சுற்றிவளைத்துவிட்டோம். இன்னும் 10 கிலோ மீற்றர்வரைதான் பிடிக்க வேண்டி இருந்தது. இதற்காகத்தான் இரண்டரை வருட காலம் போர் நடந்தது. 4 ஆயிரத்து 500 வரையான படையினரை இழந்திருந்தோம்.

அந்தப் போர் நிறுத்தத்தை மஹிந்த ராஜபக்ஷ வழங்கி இருக்காவிட்டால் 2009 மார்ச் நடுப் பகுதியில் போரை முடிவுக்குக் கொண்டுவந்திருப்போம். போர் நிறுத்தம் வழங்கப்பட்ட பிறகு புலிகள் எம்மைத் திருப்பித் தாக்கினர். நாம் ஆயுதங்களை கீழே வைத்திருந்தோம். ஐந்து கிலோ மீற்றர் வரை பின்னால் வரவேண்டி ஏற்பட்டது. பெருமளவு ஆயுதங்கள் அழிக்கப்பட்டன. 500 வரையான படையினரை இழந்தோம்.

எதற்காகப் போர் நிறுத்தம் வழங்கப்பட்டது? பிரபாகரன் உள்ளிட்ட புலித் தலைவர்களைத் தப்பிக்கவைப்பதற்காகவே இது நடந்திருக்கும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எம்மைத் தாக்கலாம் என பிரபாகரன் சிந்தித்துத் தாக்குதல் நடத்தினார். அவர் வாய்ப்பைத் தவறவிட்டிருந்தார்.

போர் முடிவடையப் போகின்றது எனத் தெரிந்தும் எதற்காக போர் நிறுத்தம் வழங்கப்பட்டது?

மஹிந்தவின் இந்தத் தேசத்துரோக செயல் தொடர்பில் இந்த அரசுக்கு முதுகெலும்பிருந்தால் நிச்சயம் விசாரணை நடத்த வேண்டும்.

2005 ஜனாதிபதி தேர்தலின்போது தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்கு விழுவதைத் தடுக்கும் நோக்கில் விடுதலைப்புலிகளுக்கு மஹிந்த தரப்பு பணம் வழங்கியது. அந்தப் பணத்தை வைத்தே கடற்புலிகளுக்குக் கப்பல் கொள்வனவு செய்யப்பட்டது. புலிகளுக்குப் பணம் வழங்கப்பட்டமை தொடர்பில் பஸில் ராஜபக்ஷவும் என்னிடம் தெரிவித்திருந்தார். எனவே, இது பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது உயர்மட்டக் குழுவொன்றை அமைத்தேனும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.” – என்றார்.

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# 'ஓ பொசிடிவ்' குருதிக்கு தட்டுப்பாடு அதி தீவிரம்!




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் “ஓ பொசிடிவ்” குருதி வகைக்குத் தற்போது அதி தீவிர தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குருதி வங்கியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் “ஓ பொசிடிவ்” குருதி வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே, தற்போது தட்டுப்பாடு மேலும் தீவிரமாகியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, “ஓ பொசிடிவ்” வகை குருதி உடையவர்கள், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நேரடியாக வருகை தந்து குருதிக் கொடையில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குருதி வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வடக்கில் புதைகுழிகளிலிருந்து மனித எலும்புக்கூடு; தெற்கில் புதைகுழிகளிலிருந்து போதைப்பொருள்கள்!

## இதையிட்டு நாடு வெட்கித் தலைகுனிய வேண்டும் என்கிறார் சத்தியலிங்கம் எம்.பி.


வடக்கில் புதைகுழிகளிலிருந்து மனித எச்சங்கள், தெற்கில் புதைகுழிகளிலிருந்து போதைப்பொருள்கள் மீட்கப்படுகின்றன. இதையிட்டு நாடு வெட்கி தலைகுனிய வேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் ஊக்க மருந்து பாவனையை தடைசெய்வதற்கான சமவாயத்தைத் திருத்தம் செய்யும் சட்ட மூலம் தொடர்பான நேற்றைய நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விளையாட்டுத்துறையில் ஊக்கமருந்துப் பாவனையை தடைசெய்வதற்கான சமவாயத்தை திருத்தம் செய்யும் இன்றைய விவாதத்தில் உரையாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியமைக்காக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது நடைமுறையிலுள்ள 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டமூலம் தற்போதைய நிலைமைக்கு ஏற்றாற்போல் திருத்தம் செய்வது காலத்தின் கட்டாயமாகும். அதனை நான் வரவேற்கின்றேன்.

ஊக்கமருந்து அல்லது போதை மருந்துப் பாவனைப்பிரச்சினை என்பது எமது நாட்டிற்கு மட்டுமானதல்ல. இது ஓர் உலகளாவிய பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. போதைமருந்து அல்லது ஊக்க மருந்துப் பாவனை விளையாட்டுத்துறையை மட்டுமல்ல ஏனைய துறைகளையும் பாதித்துள்ளது. இதையொத்த சர்வதேச சட்டங்களுடன் ஈடுகொடுத்து செல்லக்கூடிய வகையில் எமது நாட்டுச் சட்டத்திலும் திருத்தங்களை செய்யவேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. இருந்தபோதும் இவ்வுயரிய சபையால் உருவாக்கப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், அதற்கான வசதிகள் உள்ளனவா? ஆம் எனில் அதற்கான பொறிமுறை என்ன என்பதை துறைசார்ந்த அமைச்சர் அவர்கள் இந்த சபைக்கு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். காரணம் தற்போது நடைமுறையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கான உடல் தகைமை பரிசோதனை செய்வதற்கான பொருத்தமான பொறிமுறை இல்லை. நான் இது விடயமாக ஏற்கனவே இந்தச் சபையில் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். மாவட்ட வைத்தியசாலைகளில் விளையாட்டுத்துறை சார்ந்த நிபுணத்துவமுடைய வைத்தியர்களை நியமிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த அரசாங்கம் பதவியேற்ற பின்னர் நாட்டின் பாரிய சவாலாக மாறியுள்ள போதைப்பொருள் விற்பனைக்கு எதிராக பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றமை வரவேற்கப்பட வேண்டியதாகும். எனினும் இந்த வலைப்பின்னலை அவ்வளவு எளிதில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியாது.



காரணம் இதற்கு பின்னால் அதிகாரம் படைத்தவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கிறார்கள். எனினும் பலத்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அரசாங்கம் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளைப் பாராட்டுகின்றேன்.

தெற்கில் அண்மைக்காலமாக பல புதைகுழிகள் தோண்டப்படுகின்றன. அவற்றிலிருந்து பலவிதமமான போதை மருந்துகள் தயாரிப்பதற்கான இரசாயன பொருள்களும் நவீன ஆயுதங்களும் வெளிவருகின்றன.

அண்மையில் ஒரு கேலிச்சித்திரம் பார்த்தேன். இலங்கை நாட்டின் வரைபடம். அதில் வடக்கு கிழக்கில் புதைகுழிகளிலிருந்து மனித எச்சங்கள் வெளிவருகின்றன. அதே போன்று தெற்கின் புதைகுழிகளிலிருந்து போதைப்பொருள்களும் நவீன ஆயுதங்களும் வெளிவருகின்றன. இந்த நாட்டின் தற்போதைய நிலைமை இதுதான். இதனையிட்டு இந்த நாட்டு மக்கள் அனைவரும் வெட்கிதலை குனியவேண்டிய நிலையில் உள்ளோம்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டமை போன்று பெருகிவரும் போதைப்பாவனை விளையாட்டுத்துறையை மட்டும் பாதிக்கவில்லை. ஏனைய துறைகளையும் மிகமோசமாக பாதித்துள்ளது.

குறிப்பாக அண்மையில் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையொன்றின் பிரகாரம் போதை வியாபாரிகள் பாடசாலை செல்லும் மாணவர்களை குறிவைத்துள்ளார்கள். யுத்தம் நிறைவடைந்த பின் எமது மாகாணத்தில் பாடசாலைகளில் அரச இயந்திரத்தின் உதவியுடன் இச்செயற்பாடு நடைபெற்றது. அன்று எமது மாணவர்கள் மீது எறிந்த கல் பட்டுத்தெறித்து இப்போது எறிந்தவர்களிடமேயே வருகிறது. பாடசாலைகளில் இச்செயற்பாடு முன்னெடுப்பதற்கு காரணம் பதின்ம வயதுடையவர்களை இலகுவாக அணுகமுடியும் என்பதுடன் அவர்களது வியாபாரத்திற்கு புதிய வாடிக்கையாளர்களையும் பெற்றுக்கொள்ள முடியும். இது நாட்டின் எதிர்காலத்திற்கு மிகமோசமான சவாலாகும், இந்த அரசாங்கத்தின் பாணியில் சொன்னால் “வளமான நாடு - அழகான வாழ்க்கை“ எனும் தொனிப்பொருளுக்கு சவாலான விடயமாகும். நாடு வளமாக இருந்தால் மட்டுமே மக்கள் அழகான வாழ்க்கை வாழமுடியும். வளமான நாடு என்பது பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவருவது மட்டுமல்ல. சமூகம் அச்சமின்றி ஆரோக்கியமான வாழ்க்கையை வாழக்கூடிய சூழ்நிலை நாட்டில் நிலவவேண்டும். அதுவே அழகான வாழ்க்கையைக் கொடுக்கும்.

இதே போன்று போதைப்பாவனையால் பாதிக்கப்பட்ட அடுத்த முக்கியமான துறை போக்குவரத்து துறை. வாகனச்சாரதிகள், குறிப்பாக தூரப்பயணம் வாகனம் செலுத்துகின்ற சாரதிகள் ஊக்கமருந்து பாவிக்கின்றனர் எனச் சொல்லப்படுகின்றது. இதனால் பல விபத்துக்கள் நடைபெறுகின்றன. அநியாயமான உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே சாரதிகள் ஊக்கமருந்து பாவித்துள்ளார்களா என்பதை கண்டறிவதற்கான நவீன பரிசோதனை முறைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். தற்போது பாவனையிலுள்ள பல ஊக்கமருந்துகளை பாவித்துள்ளார்களா என்பதை கண்டறிவது இலகுவான விடயமல்ல. மதுசாரம் போன்று அவை மணப்பதில்லை. பெரும்பாலான சாரதிகள் வெற்றிலை பாக்குடன் இவ்வாறான ஊக்கமருந்துகளை கலந்து சூசகமாகப் பாவிக்கின்றார்கள். எனவே பரிசோதனை செய்யும் கடுமையான பொறிமுறை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

எனவே சட்டத்திருத்தங்கள் மட்டும் இவ்வாறான சமூகப்பிரச்சனைக்கு தீர்வாக அமையா. அதனை முறையாக நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்தால் மட்டுமே இந்த நாடு வளமான நாடாக மாறி மக்களுக்கு அழகான வாழ்க்கையைக் கொடுக்கும் என்பது எனது கருத்தாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எமது மாகாணத்தில் காணப்படும் முக்கியமான ஒரு விடயத்தை இங்கே உங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். வடக்கு மாகாண சபை செயற்பட்டபோது மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் மது மற்றும் போதைப்பொருளிற்கு அடிமையானவர்களை மருத்துவ புனர்வாழ்வளிப்பதற்கான நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இந்த நிலையங்கள் இன்றுவரை சிறப்பாக இயங்க முடியாதுள்ளன. ஏனெனில் இந்நிலையங்களிற்கான போதிய ஆளணி நியமிக்கப்படவில்லை. எனவே சுகாதார அமைச்சர் போதிய ஆளணியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இன்னுமொரு விடயத்தை இங்குள்ள விளையாட்டுதுறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து தேசிய, சர்வதேச விளையாட்டுக்களில் பங்குபெறும் மிகக்குறைந்தளவான விளையாட்டு வீர, வீராங்கனைகளையே காணக்கூடியதாகவுள்ளது. மிகவும் திறமையான வீர வீராங்கனைகள் இருந்தபோதும் போதிய பௌதீக மற்றும் ஆளணி வளங்கள் விளையாட்டுத் துறைக்கு ஒதுக்கப்படுவதில்லை. அமைச்சரின் அவதானத்தை இவ்விடயத்தில் கோருகிறேன். - எனத் தெரிவித்தார்.

# மின் கட்டண மாற்றம் குறித்து இன்று ஆலோசனைக் கூட்டம்




இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, 2025 ஆம் ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட மின் கட்டண திருத்தம் குறித்து இன்று பொது கூட்டத்தை நடத்தவுள்ளது.

"2025ஆம் ஆண்டுக்கான 3 ஆவது மின் கட்டண திருத்தம்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கூட்டம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட கட்டண மாற்றங்கள் குறித்து பொதுமக்கள் மற்றும் பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களைச் சேகரிப்பதே இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.




# மீனவர்களுக்கு உரிய முறையில் எரிபொருளை வழங்க வேண்டும்

## சபையில் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தல்

பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிவரும் கடற்றொழிலாளர்களுக்கு, உரிய முறையில் எரிபொருளை விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குறிப்பாக வன்னி மாவட்ட மீனவர்கள் எரிபொருளை விநியோகம் தடைப்படுவதால் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், இயந்திர மீன்பிடிப் படகுகளுக்கு 2 பில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான எரிபொருள் மானியங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதன்மூலம் இலங்கை கடற்றொழிலை மீட்டெடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## 323 கொள்கலன்கள் விவகாரம்;

# விசாரணைக்கு நாடாளுமன்ற தெரிவுக் குழு நியமிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை







கொழும்பு துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்கள் கட்டாய பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரிக்க, விசேட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமிக்க கோரி, ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சி நேற்று சபாநாயகரிடம் பிரேரணையொன்றை கையளித்தது.

முறையான நடைமுறைகளைப் பின்பற்றாமல் “சிவப்பு லேபள்” ஒட்டப்பட்டிருந்த இந்தக் கொள்கலன்களை விடுவித்தது தொடர்பாக ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் திறைசேரிச் செயலாளரால் ஏற்கனவே விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்த விசாரணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் ஆராய்ந்து எதிர்க்கட்சி தமது அவதானிப்புகளை முன்வைத்துள்ளது.

அதன்படி, கொள்கலன்களை விடுவித்த முறை சட்டத்திற்கு முரணானது எனவும்,சரியான பரிசோதனை இன்றி கொள்கலன்களை விடுவித்தமை தேசிய பாதுகாப்பு, வருமான சேகரிப்பு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு ஆகியவற்றுக்குப் பாரதூரமான அச்சுறுததலை ஏற்படுத்தியுள்ளதாக எதிர்க்கட்சி தமது அவதானிப்பை முன்வைத்தது.

இதன்மூலம் போதைப்பொருள், ஆயுதங்கள் அல்லது பிற தடைசெய்யப்பட்ட பொருட்கள் விடுவிக்கப்பட்டிருக்கலாம் என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளமையினால்

இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொரு பிரச்சினை என்பதால், இது குறித்து ஆழமாக ஆராய விசேட நாடாளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்தப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக்க, ரஞ்சித் மத்தும பண்டார, டி.வி. சானக்க, ஜே.சி. அலவத்துவல, கவிந்த ஜயவர்தன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்து சர்ச்சை கிளப்பப்பட்டிருந்தது.

இந்த நியமனத்துக்கு ஆதரவாக அரசமைப்புக் கவுன்ஸிலின் உறுப்பினரான எம்.பி. சிறிதரனும் வாக்களித்திருந்தார். அது பற்றி அச்சமயத்தில் கிளப்பப்பட்ட சர்ச்சையை என் பத்தியில் முன்னர் குறிப்பிட்டு இருந்தேன்.

தயாசிறி ஜயசேகரவின் இந்த ஆட்சேபனையைப் பயன்படுத்தி இடையில் நுழைந்து சாணக்கியன் எம்.பியும் ஜீவன் தொண்டமான் எம்.பியும் தங்கள் பக்கத்து சாடல்களை வெற்றிகரமாகப் புகுத்தினர்.

அதற்குள் இறங்க முன்னர் ஒரு பழைய 'பிளாஷ்–பாக்கை' நோக்க வேண்டும்.

அரசமைப்பு கவுன்ஸிலுக்கான பத்து உறுப்பினர்களில் ஒன்று ஆளும் கட்சி மற்றும் பிரதான எதிர்க்கட்சி ஆகியவற்றைச் சாராத கட்சிகளின் பிரதிநிதி ஒருவருக்குரியது.

தற்போதைய நாடாளுமன்றில் ஆளும் தரப்பையும், பிரதான எதிர்க்கட்சியையும் தவிர்த்தால் மிச்சம் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு இடையில் தேர்வு மூலம் ஒரு பிரதிநிதியை தெரிவு செய்வதற்கு நாடாளுமன்றுக்குள் ஒரு வாக்களிப்பு இடம் பெற்றது.

அந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சிறிதரனும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றுக்குத் தெரிவான ஒரே ஓர் எம்.பியான ஜீவன் தொண்டமானும் போட்டியிட்டனர்.

சிறிதரனுக்கு 12 வாக்குகளும், ஜீவன் தொண்டமானுக்கு 11 வாக்குகளும் கிடைத்தன என அறிவிக்கப்பட்டது.

இந்தத் தேர்தல் நடந்த சமயம் எதிர்க்கட்சியான – காஸ் சிலிண்டர் சின்னத்தில் புதிய ஜனநாயக முன்னணியில் – போட்டியிட்டு வெற்றி பெற்ற றோஹித அபேகுணவர்த்தன நாடாளுமன்றுக்கு வருகை தந்திருக்கவில்லை. அதேசமயம் அக்கட்சியின் சார்பில் ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் (ஃபைசர் முஸ்தபா) அந்த பதவிக்கு அச்சமயம் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த இருவரும் இல்லாமல் இந்தத் தேர்தல் நடத்தப்படுவதை ஆட்சேபித்த ஜீவன் தொண்டமான், மேற்படி அவர்கள் இருவரும் இருந்திருந்தால் தாமே அப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பார் என்று தெரிவித்து, நடந்து முடிந்த தெரிவை ஆட்சேபித்திருந்தார்.

இந்த நிலையில்தான் அரசமைப்பு கவுன்ஸிலில் ஒரு மேலதிக வாக்கினால் லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தின் ஆணையாளர் நாயகமாக ரங்க திஸநாயக்க தெரிவானார். அவரது தெரிவுக்கு ஆதரவாக சிறிதரன் எம்.பியும் அரசுத்தரப்போடு சேர்ந்து வாக்களித்து இருந்தார். அப்படி அவர் வாக்களித்தமை குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் ஒன்றிலும் சில உறுப்பினர்களினால் சாடல் போக்கில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்தப் பின்புலத்தில்தான் நேற்று லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தின் ஆணையாளர் நாயகத்தின் தெரிவை விமர்சித்து தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றில் உரையாற்றினார்.

இதை பயன்படுத்திக் கொண்டு சாணக்கியனும் ஜீவன் தொண்டமானும் தங்கள் பாட்டுக்கு வாங்கித் தள்ளினார்கள்.

மேற்படி லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவின் போது தமக்கு ஆதரவாக வாக்களித்த ஒரு பிரதிநிதிக்கு எதிராக லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த ஆணையாளர் நாயகம் அந்தப் பிரதிநிதிக்கு எதிராக நேர்மையான முறையில் விசாரணையை முன்னெடுப்பாரா என்று கேள்வி எழுப்பினார் சாணக்கியன் எம்.பி.

அவர் நேரடியாகப் பெயர் குறிப்பிடா விட்டாலும் தனது கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரனுக்கு எதிரான குற்றச்சாட்டுதான் அது என்பது நாடாளுமன்றத்தில் எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

அதேபோல ஜீவன் தொண்டமான் மேற்படி அரசமைப்பு கவுன்ஸிலுக்கு ஆளும் தரப்பையோ, பிரதான எதிர்க்கட்சியையோ சாராத பிரதிநிதிக்கான தெரிவு ஒழுங்காக நடத்தப்பட்டிருந்தால் தான்தான் அந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பார் என்று குறிப்பிட்டு, நேற்று நாடாளுமன்றத்தில் ஜீவன் தொண்டமான் உரையாற்ற முனைந்த போது, அவரது உரைக்கு அனுமதி மறுத்து, அவருக்கான ஒலிபெருக்கி இணைப்பை துண்டிக்கப் பணித்தார் அவைத் தலைவர் பதவியில் இருந்தவர்.

எது, எப்படியாயினும் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனுக்கு எதிராக நாடாளுமன்றில் நேற்று 'ஸேம் சைட் கோல்' அடிக்க முயற்சி எடுக்கப்பட்டது என்பது மட்டும் உண்மை.

---

## நாய் குரைப்பதால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியல் ரீதியில் வங்குரோத்தடைந்துள்ள பொன்சேகா, இன்னமும் போர் மனோநிலையிலேயே காணப்படுகின்றார் எனவும் மஹிந்தவின் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

"வெள்ளைக்கொடி கதையைக் கூறி படையினரைக் காட்டிக் கொடுத்த நபர் தான் பொன்சேகா. இது நாட்டு மக்களுக்கும் தெரியும்." – என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## புதிய தீர்மானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிராகரித்துள்ளது.

முன்னதாக குறித்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அறிவித்திருந்தார். எனினும், பிரிட்டன் உள்ளிட்ட ஏனைய நாடுகளின் ஆதரவுடன் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடாது ஏற்றுக்கொள்வதாவும் அவர் கூறியிருந்தார்.

இதன் அடிப்படையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படாமல் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், மனித உரிமைகள் மீறல் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் குறித்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முழுப் பங்கேற்புடன் பாரபட்சமற்ற முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும், தமிழ் – முஸ்லிம் சமூகங்களை விகிதாசாரமற்ற முறையில் பாதிக்கும் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்படுதல், கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் ஆகிய விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மேலும், இலங்கையின் உறுதிமொழிகளைப் பிரிட்டன் பாராட்டியதுடன், வாக்குறுதிகளை உறுதியான நடவடிக்கைகளாக மாற்ற வேண்டும், மனிதப் புதைகுழிகளை அகழ்வது, சுயாதீனமான வழக்குத் தொடுப்பு வழிமுறைகள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களைக் கண்காணிப்பதை முடிவுக்குக் கொண்டு வருதல் ஆகியவற்றின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

## இலங்கை குறித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் குறித்து ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் கண்காணிப்பக அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் லூஸி மக்கேர்னனால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும் தீர்மானம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் குறைந்தபட்சம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது. அதற்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது இலங்கையில் ஆட்சிப்பீடமேறும் அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலை முடக்கினாலும், ஏதேனுமொரு நாள் நீதியை அடையமுடியும் என்ற சிறுதுளி நம்பிக்கையைப் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் விதைத்திருக்கின்றது.

இலங்கையில் ஆட்சிப்பீடமேறிய அரசாங்கங்கள் யுத்த காலத்தில் மீறல் குற்றங்கள் இடம்பெறவில்லை என மறுத்து வந்ததுடன் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இடையூறுகளை ஏற்படுத்தியும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கு அரச பாதுகாப்புத்துறையைப் பயன்படுத்தியும் வந்தது. யுத்த காலக் குற்றங்கள் தொடர்பில் உள்ளக நீதிப் பொறிமுறையை நிறுவுவதாக அளித்த வாக்குறுதியையும், அது சார்ந்த கடப்பாட்டையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றாததன் காரணமாகவே 2021ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

முன்னைய அரசாங்கங்களுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டு தெரிவான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் இந்த விடயத்தில் தளர்வுப்போக்கைப் பின்பற்றுவது போல் தெரிந்தாலும், அந்த அரசாங்கமும் ஐ.நாவின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை நிராகரித்துள்ளது. அதுமாத்திரமன்றி போரின் பின்னரான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதாகவும், முக்கிய மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அரசாங்கம் உறுதியளித்திருப்பினும், அவற்றில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே அடையப்பட்டுள்ளது.

இந்நிலையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக உண்மையைக் கண்டறிவதற்கான உள்ளகப்பொறிமுறையை

07




# வடக்கு பிரதிப் பிரதம செயலாளராக ராஜினி ஜெயராஜ் நேற்று நியமனம்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் , வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (திட்டமிடல்) திருமதி ராஜினி ஜெயராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார்.

ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்துகொண்டார்.



## இலங்கை குறித்த...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

வலுப்படுத்துவதாக அளித்த வாக்குறுதியை அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் நிறைவேற்றவேண்டும்.

இலங்கையில் இதுவரை சுமார் 20 மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ள போதிலும், அவற்றில் எந்தவொரு மனிதப்புதைகுழி தொடர்பிலும் வெற்றிகரமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.” – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்தச் சட்டம் அவசியமா?

பொதுவான கொள்கைக் கோட்பாடுகள் பற்றிப் பேசுவதும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டங்களை நாடாளுமன்றத்தில் உருவாக்குவதும் இலகுவான விடயங்கள். ஆனால் விவகாரங்களை நடைமுறைப்படுத்தும் போது எழும் சிக்கல்கள் மோசமானவை. நெருக்கடி தரக் கூடியவை.

இலங்கை நாடாளுமன்றம் கடந்த ஜூலையில் நிறைவேற்றிய தண்டனைச் சட்ட கோவைக்கான திருத்தம் அத்தகைய வகையில் வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கை என்றாலும் - சிலாகிக்கத்தக்கது என்றாலும் - அதன் விளைவுகள் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனை மட்டுமல்லாமல், மனரீதியான அவமானங்களைக் கூடக் கட்டுப்படுத்தும் விதத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. ஓர் ஆசிரியர் ஒரு மாணவனை திட்டுவது, ஒரு பள்ளி அதிபர் மாணவனை அடிப்பது அல்லது பொது இடத்தில் அவமானப் படுத்தும் விதத்தில் உரையாடுவது போன்றவை அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களாக நாடாளுமன்றச் சட்டங்கள் மூலம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

பிள்ளைகளை - சிறார்களை - மாணவர்களை - அவர்களின் நலன்களை - பாதுகாப்பதற்கான ஒரு முன்னேற்றகரமான அடையாளமாக இந்தச் சட்டத்தைக் கொள்ளலாம். ஒழுக்கத்தின் நடைமுறையாக்கம் என்ற பெயரில் எந்தக் குழந்தையும் அவமானப்படுத்தப்படக்கூடாது - தண்டிக்கப்படக்கூடாது - கொடுமைப் படுத்தப்படக்கூடாது - என்ற மிக உயர்ந்த நோக்கில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் இத்தச் சட்டத் திருத்தம் உன்னத நோக்கங்களைக் கொண்டிருந்தாலும், அது ஓர் அழுத்தமான கேள்வியை எழுப்பவும் தவறவில்லை.

சிறார்களின் எதிர்காலத்தை - நல் வாழ்வை - பண்பியல்புகளை - தீர்மானிக்கப் போவது அவர்களது பாடசாலைக் கால ஒழுக்க வாழ்வியலும், அச்சமயம் பேணும் நற்பண்பியல்புகளும் பழக்க வழக்கங்களும்தான்.

மாணவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, நற்பண்புகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை பேணச் செய்வதில் ஆசிரியத்துவம் மீதான மரியாதையுடன் கூடிய பயம், மேன்மைத்துவத்துடன் கூடிய மதிப்பு, அன்பு மற்றும் நெருக்கத்துடன் கூடிய கண்டிப்பு போன்றவை தவிர்க்க முடியாத கட்டாயமான அம்சங்கள். அவற்றைப் பேணி நிலைநிறுத்துவதற்கான வழிமுறைகளை - மார்க்கங்களை - முறைமைகளை - உறுதிப்படுத்தும் ஒரு திட்டம் இல்லாமல் இத்தகைய சட்டங்களை மட்டும் கொண்டு வருவதன் மூலம் பாடசாலை வகுப்பறைகளில் ஒழுங்கையும், மரியாதையையும், நற்பண்பு மார்க்கங்களையும் மேம்படுத்துவதும் உறுதிப்படுத்துவதும் எவ்வாறு என்பதுதான் கேள்வி.

வளர்ந்து வரும் சிறார்களிடையே மற்றவர்களை கொடுமைப்படுத்துதல், வகுப்புகளைச் சீர்குலைத்தல், ஆசிரியர்களை அவமதித்தல், திருட்டு விவகாரம், சண்டை, சச்சரவுகள், வன்முறைப் போக்குகள் தீவிரமடைந்து வரும் காலம் இது. அதுவும் ஸ்மார்ட்போன்களின் வருகையோடு மாணவர்களின் ஒழுக்க நிலைமை கேள்விக்குள்ளாகியுள்ளது. மாணவர்கள் மீதான பெற்றோரின் கட்டுப்பாடும் குறைந்து வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தையும் மேன்மையையும் சிறப்பையும் பங்கப்படுத்தும் விதத்திலான சட்டங்களின் விளைவு யாது என்பது பற்றிச் சிந்திப்பது முக்கியமானது.

அதுவும் வரலாற்றில் முன் பின் இல்லாதவாறு போதைப்பொருள் பாவனைப் பிரச்சினை நேரடியாக மாணவர்களை இலக்கு வைத்து நகர்ந்து கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் சிறார்களின் மேம்பாடு, ஒழுக்கவியல் பண்பாட்டுச் சிறப்பு என்ற பெயர்களில் சிக்கலான விளைவுகள ஏற்படுத்தக் கூடிய சட்டங்களைக் கொண்டு வருவது குறித்து ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்திப்பது நல்லது.







# சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி அநுரகுமாரவுடன் உரையாடல்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆறாவது தவணையை வழங்குவதற்கு முன்னதாக நடத்தப்படும் ஐந்தாவது மீளாய்வின் இடைக்காலக் கலந்துரையாடலாக இது நடத்தப்பட்டது.

பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையிலிருந்த நாட்டை, அதிலிருந்து விடுவித்து அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்றும், இதற்காக அரசாங்கத்திடம் மூலோபாயத் திட்டம் இருப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு, சர்வதேச நாணய நிதியம் வழங்கும் ஆதரவை தான் பெரிதும் பாராட்டுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பொருளாதார மறுமலர்ச்சியை அடையக்கூடிய நாடாக இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு, சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த இலக்குகளைத் தாண்டிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் இனங்கண்டுள்ளதாகவும், அதற்காக அரசாங்கம் முறையான திட்டத்தை வகுத்துள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

பொருளாதார மறுமலர்ச்சி இலக்கை அடைவதற்கு, அதிகளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பது அவசியம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அதற்காக முதலீட்டிற்கு உகந்த சூழலை நாட்டில் உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டியதுடன், எதிர்காலத்தில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.





# வீதி விபத்தில் படுகாயமடைந்த சமுர்த்தி உத்தியோகத்தர் மரணம்

(இரா.மயூதரன்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி தர்ஷன் (வயது 48) என்ற இரண்டு பிள்ளைகளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சங்கானை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வரும் அவர் கடந்த 01 ஆம் திகதி வட்டுக்கோட்டை- சித்தங்கேணி வீதி ஊடாக வீட்டிலிருந்து அலுவலகத்துக்கு சென்று கொண்டிருந்தபோது, மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டார். இதன்போது காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நாம் வங்குரோத்தான நாட்டை அனுபவிக்க வழிவகுத்த காரணிகளில் ஒன்று மோசமான கடன் முகாமைத்துவம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



“அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகியுள்ள நிலையில் அரசாங்கம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதுடன் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் எடுத்த புதிய கடன்களை சபைக்கு தெரிவிக்க வேண்டும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையில் கட்டளை 27(2) இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றுக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

“இலங்கையர்களாகிய நாம் வங்குரோத்தான நாட்டை அனுபவிக்க வழி வகுத்த விசேட காரணிகளில் ஒன்றுதான் மோசமான கடன் முகாமைத்துவமாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு கண்டிருந்த சமயம் நாட்டைப் பொறுப்பேற்ற தற்போதைய அரசாங்கம், நாட்டை அபிவிருத்திப் பாதையை நோக்கி வழிநடத்தும் என்று மக்கள் எதிர்பார்த்தனர்.

இதன்பிரகாரம், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்கும் மேலாகிவிட்ட இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதற்கான பொருளாதார தயார் நிலையையும் தெரிந்து கொள்ள பின்வரும் கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

தற்போது இலங்கையின் ஒட்டு மொத்த கையிருப்புத் தொகை எவ்வளவு? கடந்த ஆண்டில் கையிருப்பில் காணப்பட்ட மாதாந்த மாற்றங்கள் யாவை?

தற்போது நாட்டின் மொத்த கடன் தொகை எவ்வளவு? அந்தக் கடனில் உள்நாட்டுக் கடன் எவ்வளவு, வெளிநாட்டுக் கடன் எவ்வளவு என்பதைத் தனித்தனியாகக் கூற முடியுமா?

இதில், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பெற்றுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் தொகைகள் யாவை? வெளிநாட்டுக் கடனைப் பொறுத்தவரை, இருதரப்பு, பலதரப்பு மற்றும் பிணைமுறி பத்திரதாரர்கள் என தனித்தனியாகத் தகவல்களை வழங்க முடியுமா?

இந்த ஆண்டில் கடன் தவணைகள் மற்றும் வட்டியாக செலுத்தப்படும் முழுத் தொகை எவ்வளவு? அடுத்த 5 ஆண்டுகளுக்கு இது எவ்வாறு மாறுகிறது என்ற முறையை வருடாந்தம் தனித்தனியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமா?

அடுத்த 5 ஆண்டுகளுக்கு கடனைச் திருப்பிச் செலுத்தும் செயல்முறையை தொடர்ந்தும் நிலைபேறானதாக பேணிச் செல்ல அரசாங்கத்தினால் மதிப்பிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி விகிதம் யாது?

இந்த இலக்குகளில் எத்தனை விகிதம் இந்த ஆண்டு அடையப்பட்டுள்ளது? அடுத்த 5 ஆண்டுகளில் இது எவ்வாறு செயல்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது?

கடனைத் திறம்பட செலுத்த ஆண்டுதோறும் பேணிச் செல்ல வேண்டிய மதிப்பிடப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச ஏற்றுமதி வருவாய் மற்றும் வெளிநாட்டு பணம் அனுப்புதல் எவ்வளவானதாக அமைந்து காணப்பட வேண்டும்?

இதற்காக கடந்த ஆண்டில் அரசாங்கம் வகுத்துள்ள திட்டம் யாவை? இந்தத் வேலைத்திட்டத்தின் ஊடாக அரசாங்கத்தால் வெற்றிகரமாக அடைந்து கொள்ளப்பட்ட இலக்குகள் யாவை?

கடந்த ஆண்டு அந்நிய நேரடி முதலீடாக எவ்வளவு தொகையை இலங்கை பெற்றது? அடுத்த 5 ஆண்டுகளில் அரசாங்கம் எதிர்பார்க்கும் அந்நிய நேரடி முதலீடுகளின் அளவு யாவை ? எந்தெந்த துறைகளில், எந்த தொகைகளில் இந்த முதலீடுகளை ஈர்த்துக் கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கிறது?

இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியை இரத்துச் செய்வதாலோ அல்லது தொடர்வதாலோ பொருளாதாரத்தின் மீது ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பில் கணிப்பீடொன்றை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதா ?

ஆமெனில், அது தொடர்பான புள்ளிவிபர தரவு அறிக்கைகள் யாவை ? அவற்றை சபையில் சமர்ப்பிக்க முடியுமா? ஆகிய கேள்விகளுக்கு அரசாங்கத்திடம் முறையான பதிலை எதிர்பார்க்கிறோம்.” என்றார்.









# வல்லிபுர ஆழ்வார் பெருவிழா கொடி இறக்கத்துடன் நிறைவு!

(இரா.மயூதரன்)

பருத்தித்துறை, துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த மஹோற்சவம் கொடியிறக்கத்துடன் நேற்று செவ்வாய்க்கிழமை நிறைவு பெற்றுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கொடி யேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெற்று வந்த நிலையில், இறுதி நாளான நேற்று செவ்வாய்க்கிழமை கேணித் தீர்த்த திருவிழாவும் இடம்பெற்று மாலை கொடி இறக்கம் இடம்பெற்றது.

மகோற்சவ குரு கணபதீஸ்வரக் குருக் கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் சிறப்பு கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் 7.00 மணிக்கு கொடி இறக்கப்பட்டது.

இதன்போது ஆயிரத்திற்கு மேற்பட்ட பத்தர்கள் பங்கேற்று ஸ்ரீ வழிபட்டிருந் தனர்.











# கமல்ஹாசன் நடுநிலையுடன் பேசுவது உங்களைப் போன்றவர்களுக்கு புரியாது

## அண்ணாமலைக்கு ம.நீ.ம. கண்டனம்



கமல்ஹாசனின் நடுநிலையான பேச்சு, உங்களைப் போன்ற "என்டெர்டெய்னர்களுக்கு" புரியாது என்று பா.ஜ.க. முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு மக்கள் நீதி மய்யம் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது மநீம மாநிலச் செயலாளர் முரளி அப்பாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"உடல் மொழியால் போலிப் பணிவும், நரம்பில்லாத நாக்கால் தடித்த வார்த்தைகளை தரம் பார்க்காமல் எல்லோர் மீதும் கொட்டுவதும் வழக்கமாக கொண்ட பா.ஜ.கவாலேயே புறக்கணிக்கப்பட்ட அண்ணாமலை இன்று எங்கள் தலைவரைப் பற்றி, ஒரு நாடாளுமன்ற ஆசனத்துக்காக தன் ஆன்மாவை விற்றுவிட்டவர் என்று கூறியுள்ளார்.

ஆட்களையும், கட்சிகளையும் விலைக்கு வாங்கும் பழக்கமுள்ள பா.ஜ.கவும், அந்தக் கட்சியால் பொலிஸிலிருந்து அரசியலுக்கு விலைக்கு வாங்கப்பட்ட அண்ணாமலையும் இப்படி பேசுவது ஆச்சரியமில்லை. உலகம் புகழும் மாபெரும் கலைஞர், இந்திய அரசின் வருமானத் துறையாலேயே நேர்மையாளர் பட்டம் பெற்றவர், 7 ஆண்டுகள் மய்யம் என்ற புதிய சித்தாந்ததோடு கட்சி நடத்தி வருபவர், பல்துறை வித்தகர் எங்கள் தலைவர் கமல்ஹாசன்.

அவர் ஏற்றுக்கொண்டதால் அந்த எம்.பி பதவி தான் கௌரவம் பெற்றதேயொழிய அவர் தகுதிக்கு இந்தப் பதவி சாதாரணம். மக்கள் பிரச்சினைகளை உரிய இடத்தில் பேச ஒரு வாய்ப்பாக எம்.பி பதவியை எங்கள் தலைவர் கமல் பார்க்கிறாரே தவிர அதை தனக்கான கிரீடமாக பார்க்கவில்லை. அவர் எந்தவொரு பதவியில் இல்லாவிட்டாலும், அவர் குரலை இந்தியா திரும்பிப் பார்க்கும் உங்கள் தலைவர்கள் உட்பட. ஆனால், உம்முடைய குரல் வெறும் ஊடகத் தீனிதான் என்பதை நீங்கள் உணர வேண்டும், அண்ணாமலை.

நடந்த சோக நிகழ்வுக்கு யார் பொறுப்பு என்று ஊடகம் கேட்கும்போது நாம் எல்லோரும்தான் பொறுப்பு என்று கூறியவர் எங்கள் தலைவர் கமல். அவரின் நடுநிலையான பேச்சு உங்களைப் போன்ற "என்டெர்டெய்னர்களுக்கு" புரியாது என்று கூறிக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் மீது பாதணி வீச முயற்சித்த வழக்கறிஞர்

## தலைவர்கள் கண்டனம்

இந்திய உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் மீது வழக்கறிஞர் ஒருவர் பாதணி வீச முற்பட்டது சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் 52 ஆவது தலைமை நீதியரசராக பி.ஆர் கவாய் பதவியேற்றுப் பணியாற்றி வருகிறார்.

நவராத்திரி விடுமுறைகள் முடிந்து வழக்கம் போல் இன்று உச்ச நீதிமன்றத்தின் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.

அப்போது, உச்ச நீதிமன்றத்தின் முதன்மை அமர்வான தலைமை நீதிபதி அமர்வுக்குள் நுழைந்த வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் என்பவர் அவரது பாதணியைக் கழற்றி பிரதம நீதியரசர் பி.ஆர் கவாய் மீது வீச முற்பட்டார்.

ஆனால், ஏற்கனவே பாதுகாப்புப் பணிகள் நின்று கொண்டிருந்த பொலிஸார் வழக்கறிஞரைப் பிடித்து நீதிமன்ற அறைக்குள் இருந்து வெளியே கொண்டு சென்றனர்.

அப்போது, அந்த வழக்கறிஞர் "சனாதனத்தின் மீதான அவமானங்களை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம்" எனக் கூச்சலிட்ட படியே வெளியே சென்றுள்ளார்.

உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் மீது நீதிமன்ற வளாகத்திலேயே பாதணி வீச முற்பட்ட சம்பவம் அதிர்வலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் குறித்து அங்கிருந்த பிற வழக்கறிஞர்களிடம் பேசிய உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசர் பி.ஆர் கவாய், "இவற்றால் திசை திரும்பி விடாதீர்கள், நாங்கள் திசை திரும்பவில்லை. இவையெல்லாம் என்னைப் பாதிக்காது" என்று கூறி, வழக்குகளின் விசாரணையைத் தொடர்ந்தார்.

இந்நிலையில் பாதணி வீச முயன்ற வழக்கறிஞர் ராகேஷ் கிஷோர் மீது ஒழுங்கு நடவடிக்கைகளை அகில இந்திய "பார் கவுன்சில்" தொடங்கியுள்ளது. அதன்படி, அவரின் வழக்கறிஞர் உரிமம் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், விஷ்ணு சிலை புதுப்பிப்பு தொடர்பான வழக்கில் தலைமை நீதிபதி கூறிய கருத்து சர்ச்சையாகியிருந்த நிலையில் இத்தாக்குதல் நடந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தச் சம்பவத்திற்குக் கடும் கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

உச்ச நீதிமன்ற பிரதம நீதியரசரைத் தாக்க முயன்றது



வெட்கக்கேடான செயல் எனத் தெரிவித்திருக்கும் முதல்வர் ஸ்டாலின், இது நமது ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்றும் தெரிவித்திருக்கிறார்.

"தாக்குதல் நடத்தியவர் தனது செயலுக்கான காரணத்தை வெளிப்படுத்தியிருப்பது, நமது சமூகத்தில் அடக்குமுறை மற்றும் மனநிலை இன்னும் எவ்வளவு ஆழமாக நீடிக்கிறது என்பதைக் காட்டுகிறது" எனவும் முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

நமது அமைப்புகளை மதிக்கும், பாதுகாக்கும் ஒரு கலாசாரத்தை வளர்க்க வேண்டும் என்றும் எக்ஸ் தளத்தில் பதிவு செய்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் குறித்துக் காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் சோனியா காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதில், உச்ச நீதிமன்ற வளாகத்திலேயே பிரதம நீதியரசர் மீதான தாக்குதலைக் கண்டிக்க எந்த வார்த்தைகளும் போதாது.

இந்தச் சம்பவம், பிரதம நீதியரசர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மட்டுமல்ல இது நமது அரசியலமைப்பின் மீதான தாக்குதல் ஆகும். பிரதம நீதியரசர் கவாய் மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொண்டார்.

ஆனால், தேசமே ஆழ்ந்த துயரத்துடனும், கோபத்துடனும் அவருக்கு ஆதரவாக ஒன்றிணைந்து நிற்க வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.



# அரசு மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழப்பு

ஜெய்ப்பூரில் உள்ள அரசு மருத்துவமனையில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் சிக்கி 6 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் சவாய்மான் சிங் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனையில் உள்நோயாளிகளாக ஏராளமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


இந்நிலையில் மருத்துவமனையின் 2 ஆவது மாடியில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவில் இரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ வேகமாக மருத்துவமனையின் பிறபகுதிகளுக்கும் பரவியது. இதனால் அங்கு சிகிச்சைப் பெற்று வந்த நோயாளிகள், அவர்களது குடும்பத்தினர் உடனடியாக அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தனர்.

தீவிபத்து குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்புத் துறையினர் விரைந்து வந்து தீயை அணைக்க முயன்றனர். சுமார் 4 மணி நேரம் போராடி தீ அணைக்கப்பட்டது. இந்த பயங்கர தீ விபத்தில் சிக்கி, அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வந்த 2 பெண்கள், 4 ஆண்கள் உள்பட 6 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 5 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தீவிபத்தில் சிக்கி தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த விலை உயர்ந்த மருத்துவ உபகரணங்கள் எரிந்து நாசமாயின. தீ விபத்து குறித்து பொலிஸார் நடத்திய முதல்கட்ட விசாரணையில் மின்கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

# 3 அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு பௌதீகவியலுக்கான நோபல் பரிசு




உலகின் மிக உயரிய விருதான நோபல் பரிசு அறிவிப்புத் தொடரில், நேற்று பௌதீவியலுக்கான நோபல் பரிசு மூன்று அமெரிக்க விஞ்ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

இலத்திரனியல் மற்றும் குவாண்டம் அறிவியலின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஆய்வுகளுக்காக, ஜோன் கிளார்க், மைக்கல் எச். டெவோரெட் மற்றும் கோன் எம். மார்ட்டினிஸ் ஆகியோருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களின் இந்த கண்டுபிடிப்புகள் குவாண்டம் கிரிப்டோகிராபி, குவாண்டம் கணினிகள், மற்றும் குவாண்டம் சென்சர்கள் போன்ற அதிநவீன சாதனங்களை உருவாக்குவதற்கான புதிய வாய்ப்புகள் திறக்கப்பட்டுள்ளன.

நோபல் பரிசு அறிவிப்புகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

நேற்று முன்தினம் 2025 ஆம் ஆண்டுக்கான மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த மேரி இ. புரூன்கோவ், ஃப்ரெட் ராம்ஸ்டெல், மற்றும் ஜப்பானைச் சேர்ந்த ஷிமோன் சகாகுச்சி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

நோய் எதிர்ப்புச் சக்தியின் “புறத்தாங்குதிறன்” குறித்த அவர்களின் கண்டுபிடிப்புகளுக்காக இவர்களுக்கு இந்தப் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது.

நேற்று இயற்பியலுக்கான பரிசு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்று இரசாயனவியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட உள்ளது.

நோபல் பரிசு வென்றவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 10 ஆம் திகதி பரிசுகளும் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




# இஸ்ரேல் - ஹமாஸ் போர் 2 ஆண்டுகளைக் கடந்தது

## பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிப்பு

காஸாவில், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் தொடங்கி 2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இஸ்ரேலின் முக்கிய நகரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப் பட்டுள்ளன.

இஸ்ரேலில், கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி, யூதர்களின் சுக்கோத் பண்டிகையின் விடுமுறைகளை முன்னிட்டு நடைபெற்ற விழாவில், பாலஸ்தீன ஹமாஸ் கிளர்ச்சியாளர்கள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதல்களில் 1,000 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன், 251 இஸ்ரேலியர்கள் பணயக் கைதிகளாக ஹமாஸ் படையினரால் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

இதில், பெரும்பாலான பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட்ட நிலையில், 48 பேர் மட்டும் தற்போது ஹமாஸ் கட்டுப் பாட்டில் உள்ளனர் என கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, காஸாவில் மீதான இஸ்ரேலின் போரில், இதுவரையில் 67,000 இற்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மேலும், ஆயிரக்கணக்கானோர் மாயமாகியுள்ளனர்.

இந்த நிலையில், காஸா மீதான போர் தொடங்கி நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்தன.

மேலும், இஸ்ரேலில் தற்போது சுக்கோத் பண்டிகையின் விடுமுறைகள் தொடங்கியுள்ளதால், இஸ்ரேலின் முக்கிய நகரங்களில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போர் தொடங்கியது முதல், ஈரான் உள்ளிட்ட 5 நாடுகளின் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.


காஸாவுக்குள் நிவாரண உதவிகள் செல்வதற்கு இஸ்ரேல் தடை விதித்துள்ளதால், உணவு மற்றும் மருத்துவ வசதிகளுக்கு அங்கு பெரும் பஞ்சம் உருவாகியுள்ளது.

இதனால், நாள்தோறும் ஏராளமான குழந்தைகள் பசியாலும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினாலும் உயிரிழந்து வருகின்றனர்.

இத்துடன், ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையில் போர் நிறுத்தம் கொண்டு வருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் 20 முக்கிய அம்சங்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய அமைதித் திட்டத்தை முன்மொழிந்துள்ளார்.

இதையடுத்து, இந்தப் போர் நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தை பலத்த பாதுகாப்புடன் எகிப்தின் ஷர்ம் எல்- ஷெயிக் நகரத்தில், நேற்று முன்தினம் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# வடக்கில் 'லஞ்ச் சீற்' பாவனை அடுத்த வருடம் தொடக்கம் தடை

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

01.01.2026 இலிருந்து வடக்கு மாகாணம் முழுவதிலும் லஞ்ச்சீற் பாவனையை தடை செய்வது எனவும், பதிலீடாக வாழையிலையைப் பயன்படுத்துவது மற்றும் உணவுத்தட்டுக்களைக் கொதிக்க வைப்பது ஆகியவற்றைப் பின்பற்றலாம் என்றும், இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றாத உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றுவது எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள், தவிசாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள மாநகர சபைகளின் மேயர்கள், நகர சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் ஆகியோருக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

“பிரதேச சபைகளில் பணியாற்றுபவர்களின் எண்ணங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். மக்கள் பல்வேறு அனுமதிகள் தாமதமடைவதாகச் சுட்டிக்காட்டுகின்றார்கள். மக்களுக்கான சேவைகளை துரிதமாகச் செய்து கொடுக்க வேண்டும். தவிசாளர்களும், செயலாளர்களும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் ஊடாகவே அபிவிருத்தி சாத்தியமாகும்.

திண்மக் கழிவு அகற்றல் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சவாலாகி வருகின்றன. திண்மக் கழிகளைத் தரம் பிரிக்கும் நிலையங்களை ஒழுங்காக செயற்படுத்தாதன் காரணமாக மக்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிடுகின்றார்கள். எனவே, அது தொடர்பில் சபைகள் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.

போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஒருவழிப் பாதைகளை அறிமுகப்படுத்தல், கனரக வாகனங்களின் பாவனைக்கு நேரக் கட்டுப்பாடுகளை விதித்தல் ஆகியனவற்றைச் செயற்படுத்த வேண்டும். இது தொடர்பில் பொலிஸாரின் ஒத்துழைப்பு உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பெற்றுத்தரப்படும்.

எதிர்வரும் மழை காலத்துக்கு முன்னர் சபைகளுக்கு உட்பட்ட அனைத்து வாய்க்கால்கள், மதகுகளைத் துப்புரவு செய்யுங்கள். சில சபைகள் ஏற்கனவே எங்களால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவான நடவடிக்கையை எடுத்துள்ளன. அதை ஏனைய சபைகளும் செய்ய வேண்டும். அதேநேரம், வெள்ளம் வடிந்தோடுவதற்குத் தடையாக அமைந்துள்ள சட்டமுரணான கட்டுமானங்களை உடனடியாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கட்டங்களுக்கான குடிபுகு சான்றிதழைப் பெற்றுக்கொள்வதைக் கட்டாயமாக்குவதுடன் அவ்வாறு பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆரம்பிக்க வேண்டும். அதேநேரம், உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான கடைகள் பல உரிமம் மாற்றம் செய்யப்படாமல் நீண்ட காலமாக உள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு விரைவான பொறிமுறையைத் தயாரிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்கள் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு விதமான முதலீட்டாளர்களையும் ஈர்க்க வேண்டும். முதலீட்டாளர்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதில் உள்ள இழுபறிகள் காரணமாக திரும்பிச் செல்கின்றனர். எனவே உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் முதலீட்டாளர்களை ஈர்த்துக்கொள்ள வேண்டும். இதேநேரம், முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால குத்தகையை வழங்குவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் தங்களின் சபைத் தீர்மானத்துடன் உரியவாறு அனுப்பி வைத்தால் அனுமதி வழங்க முடியும்.

அதேபோல தனியார் கல்வி நிறுவனங்

தொடர்ச்சி▼









# வடக்கில் 'லஞ்ச் சீற்' பாவனை அடுத்த வருடம் தொடக்கம் தடை

## ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

தொடர்ச்சி▲

கள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் கவனம் செலுத்த வேண்டும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கற்கின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் உரிய சுகாதார வசதிகளைக் கொண்டிருப்பதில்லை. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஊடாக அவற்றைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சபைகள் தங்களின் வருமானங்களை உயர்த்தும் வகையில், மிக நீண்ட காலம் மேற்கொள்ளப்படாதுள்ள சோலை வரி மீளாய்வை துரிதமாகச் செய்து முடிக்க வேண்டும். அதைப்போல உள்ளூராட்சி மன்றங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நடமாடும் சேவைகள் மக்களிடத்தில் வரவேற்பை பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

சபைகள் தங்களின் ஆளுகைக்கு உட்பட்ட மயானங்களின் எல்லைகளை உரிய முறையில் அடையாளப்படுத்தி அவற்றை அழகுபடுத்த வேண்டும்.

அதேபோன்று தங்கள் பிரதேச எல்லைக்குள் மரம் நடுகையை ஊக்குவிக்கவேண்டும். ஏற்கனவே தன்னார்வமாக செயற்படுவதற்கு தயாராகவுள்ள நிறுவனங்களுடன் இணைந்து அதனைச் செயற்படுத்தலாம்.

வாகனப் பாதுகாப்பு தரிப்பிடங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படுவதுடன் அங்கு ரசீது வழங்குபவர்களுக்குச் சீருடை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.” – என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவது தொடர்பில் வடக்கு மாகாணத்தில்சிலபிரச்சினைகள்உள்ளமையைதவிசாளர்கள் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினர். இறைச்சிக்கடைகள் கேள்வி கோரப்படும்போது செயற்கையாக அதிக தொகை நிர்ணயிக்கப்படுகின்றது என்றும், இதனால் இறைச்சியின் விற்பனை விலை அதிகரிக்கின்றது எனவும் குறிப்பிட்டனர். வடக்கு மாகாண ரீதியான ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ளுமாறு ஆளுநரை அவர்கள் கோரினர். வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துடன் கலந்துரையாடி இந்த விடயத்தை ஒழுங்குபடுத்துவதாக ஆளுநர் பதிலளித்தார்.

சந்தைகளில் விவசாயிகளின் கழிவுப் பிரச்சினை தொடர்பிலும் ஆராயப்பட்டது. அதை நடைமுறைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் பேசப்பட்டது. டிஜிட்டல் விலைப் பலகையைக் காட்சிப்படுத்தி ஏனைய சந்தைகளிலுள்ள விலை நிலவரங்களை தெரியப்படுத்துவதன் ஊடாக இடைத்தரகர்களை இல்லாமல் செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் சந்தைக் கழிவு முறைமையை நீக்குவதற்கு ஆளுநரால் அறிவிக்கப்படும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தயாராகவிருப்பதாகவும், சில இடங்களில் அதனைச் செயற்படுத்த பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற்றுத் தரவேண்டும் எனவும் தவிசாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச நீர்மேலாண்மை நிறுவனத்தால், நீர் முகாமைத்துவம் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களால் செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. குறிப்பாக குழாய் கிணறுகள் வர்த்தக மற்றும் விவசாய நோக்கங்களில் அமைக்கப்படும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் எதிர்காலத்தில் அதனை எவ்வாறு ஒழுங்குமுறைப்படுத்துவது என்பன தொடர்பில் ஆராயப்பட்டன.

மேலும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடபிராந்திய பணிப்பாளர் தலைமையிலான குழுவினரால் சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன. இதன்போது, பூர்வாங்க திட்டமிடல் அனுமதிக்கு தேசிய ரீதியாக ஓர் ஏற்பாடு உள்ளபோதும் வடக்கு மாகாணத்தில் பிறிதொரு நடைமுறை பின்பற்றப்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அதனை தேசிய ரீதியில் பின்பற்றப்படும் நடைமுறையை எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கு தயாராகவுள்ளதாக, நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் பதிலளிக்கப்பட்டது.

உள்ளூராட்சி மன்றங்களின் தீர்மானங்களுக்கு அமைவாகவே உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்யுமாறு தவிசாளர்களால் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தொடர்பில் மாவட்டச் செயலர்களுடன் கலந்துரையாடுவதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.









# இனவழிப்புக்கு நியாயம் கோரி பலஸ்தீனக் கொடிகளுடன் மட்டக்களப்பில் காந்தி பூங்கா வரை கவனவீர்ப்புப் பவனி









**(கனகராசா சரவணன்)**

பாலஸ்தீனம் காசா யுத்தத்தின் மூன்று வருட நினைவு நாளை முன்னிட்டு இன அழிப்புக்கு நியாயம் கோரியும், பாலஸ் தீனத்தைத் தனி நாடாகப் பிரகடனப் படுத்தி கோரி 1245 ஆவது நாள் நியாய பயணத்தின் ஊடாக பலஸ்தீன கொடி களை ஏந்தியவாறு பெண்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள செபஸ்தி யார் ஆலயத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும் கவனவீர்ப்பு நடைபயணத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள செபஸ்தியார் ஆல யத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும் 'நீதி, நியாயம் கோரி தொடர்ந்து 1245 ஆவது நாள் நியாய பயணம்' என்ற தொனிப்பொருளில் அநீதிகள் மற்றும் படுகொலைகளுக்கு எதிரான சுலோ கங்கள் ஏந்தியவாறு பெண்கள் அமைப்பு நடைபயணம் மேற்கொண்டது.

'77 வருடங்களாக பலஸ்தீனம் உன்னை புதைக்க முயற்சித்துள்ளனர்', 'மீண்டும் மீண்டும் நீ சாம்பலில் இருந்து பீனிக்ஸ் பறவையாய் எழுவாயாக!', 'உப்பில்லா உணவு போல பலஸ்தீனம் இல்லாத நாடு முழுமை அற்றதாகவும் சுவையற்றதாகும் இருக்கும்', 'ஆற்றில் இருந்து கடல் வரை பலஸ்தீனம் விடுதலை யாகும்' என சுலோகங்களை கழுத்தில் தொங்க விட்டவாறு அங்கிருந்து காந்தி பூங்கா வரையும் நடைபயணமாக சென்றடைந்தனர்.

அதனை தொடர்ந்து அங்குள்ள காந்தி சிலையில் காந்தியின் மேல் பலஸ்தீன அடையாளம் கொண்ட துணியால் அவரது உடலை போர்த்துக் கொண்டமையுடன் தலைக்கு மேல் குடை ஒன்றை பொருத் திய பின்னர் 'யுத்தத்தின் வேதனை அறிந்தவர்கள் நாம். இந்த வேதனை எங்கும் தொடரக்கூடாது, நாளைய மழலை கள் பலி ஆகக் கூடாது என்பதே எமது வேண்டுதல்.' - எனக் குரல் எழுப்பிக் கொண்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# மஸ்கெலியாவில் குளவிக் கொட்டு மூவர் வைத்தியசாலையில் சேர்ப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள டீசைட் தோட்டத்தில் நேற்றுக் குளவிக் கொட்டுக்கு இலக்கான மூவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டு இருந்த வேளையில் தேயிலை செடியின் கீழ் பகுதியில் இருந்த குளவி கள் கலைந்து தேயிலை கொழுந்து பறித் துக் கொண்டு இருந்த பெண் ஒருவர் மற்றும் ஆண்கள் இருவரை குளவி கொட்டியமையால் கொட்டுக்கு இலக்கான மூன்று பேரையும் மஸ்கெலியா மாவ-ட்ட வைத்திய சாலையில் அனுமதித்த னர்.



அவர்களில் இரண்டு ஆண்கள் மேல திக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க பட்டுள்ளனர் என மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் உள்ள வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



# கிழக்கு பாலர் பாடசாலைக் கல்விப் பணியக தலைமையகத்தை மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கு இடம் மாற்றுவதா?

## ஆட்சேபித்து அக்கரைப்பற்றில் நேற்றுக் கண்டனப் போராட்டம்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்விப் பணியக தலைமை காரியாலயத்தை மட்டக்களப்பிலிருந்து அகற்றி திருகோண்ச்மலைக்கு இடம் மாற்றம் செய்கின்றமையை ஆட்சேபித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை பகல் அக்கரைப்பற்றில் முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை வலயம், சம்மாந்துறை வலயம், அக்கரைப்பற்று வலயம், திருக்கோயில் வலயம் ஆகியவற்றின் முன்பள்ளி அபிவிருத்தி ஒன்றியத்தினால் இப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப் போராட்டம் அக்கரைப்பற்றிலுள்ள அம்பாறை மாவட்ட பாலர் பாடசாலை கல்வி பணிமனைக்கு முன்பாக இடம்பெற்றது.

இதில் நூற்றுக்கு மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள்.

கைகளில் பதாகை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி தங்களுடைய எதிர்ப்பை அவர்கள் வெளியிட்டனர். இதில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பாலர் பாடசாலை செயலாற்றுப் பணியாளர், பாலர்பாடசாலை கல்வி பணியகப் பணிப்பாளர் மற்றும் அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர் வை. ராசித்திற்கும் அது வழங்கி வைக்கப்பட்டது.

முன்பள்ளி கல்விப் பணியக மட்டக்களப்பு தலைமைக் காரியாலயத்தை இடமாற்றம் செய்வது குறித்து ஆட்சேபனை தெரிவித்தல்“ என்ற தலைப்பில் அமைந்த அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை காலமும் மட்டக்களப்பில் இயங்கிக் கொண்டு வரும் முன்பள்ளி கல்வி பணியகத்தின் தலைமைக் காரியாலயம் மட்டக்களப்பில் இயங்கி வருவதற்கான காரணம் கிழக்கு மாகாணத்தின் மத்திய பிரதேசமாக மட்டக்களப்பு இருப்பதனால் ஆகும்.

அம்பாறை மாவட்டத்தின் லகுகல, பாணம, பொத்துவில் தொடக்கம் அம்பாறை தமண, உஹன பிரதேசங்களில் இருந்து மிகவும் சிரமப்பட்ட நிலையில்தான் மட்டக்களப்பு காரியாலயத்திற்கு ஆசிரியர்கள் அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வந்து செல்கின்றார்கள்.

இந்நிலையில் பாலர் பாடசாலை கல்வி பணியகத்தை திருகோணமலைக்கு இடமாற்றம் செய்தால் அரசினால் வழங்கப்படுகின்ற 6,000 ரூபா கொடுப்பனவை விடவும் அதிகமாக செலவு செய்து, அதேவேளை ஒரு முழு நாளையும் தியாகம் செய்து, அந்தக் காரியத்துக்கு சென்று வரவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு முன்பள்ளி ஆசிரியர்களாகிய நாங்கள் உள்ளாக நேரிடும். இதன் காரணமாக நாங்கள் அதிக அளவு சிரமத்தை எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

இந்தக் காரணங்களைல், மேற்படி இடமாற்றத்தை செய்து முன்பள்ளி ஆசிரியர்களாகிய எங்களை அதிக சிரமத்திற்குள்ளாக்கி எங்கள் மனங்களையும் புண்படுத்தாமல் எங்களுக்கான சிறந்த தீர்வினை பெற்றுத்தர வேண்டுகிறோம்.
- என்று உள்ளது.











# கொட்டகலையில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 2 பேருக்குக் காயம்

**(க.கிஷாந்தன்)**

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவர் படுகாயமடைந்து கொட்டகலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலையில் இருந்து ஹட்டன் நோக்கியும், ஹட்டனில் இருந்து கொட்டகலை நோக்கியும் நேற்றுப் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் கொட்டகலை நகர மையப் பகுதியில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இன்று இடம்பெற்றுள்ளது.

ஹட்டனில் இருந்து கொட்டகலை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், அதே திசையில் பயணித்த முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முயன்ற போது, எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதமடைந்துள்ளன. விபத்து குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# காதரியா கடற்கரை பிரதேசத்தில் கஞ்சாவுடன் இரண்டு பேர் கைது

**(றிபாஸ்)**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக் குட்பட்ட காதரியா கடற்கரை பிரதே சத்தில் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சப் இன்ஸ்பெக்டர் யூ.எல்.எஸ்.ஆப்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளமையுடன் விற்பனைக்காக வைத்திருந்த 18 கிராமும் 890 மில்லி கிராம் கேரளா கஞ்சாவையும் அவரிடமிருந்த மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியிருந்தனர்.

இதேவேளை மற்றைய சந்தேக நபரிடமிருந்து மூன்று கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது.



கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நேற்று செவ்வாய்க்கிழமை அக்க ரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர் வரும் 21ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

மேலதி விசாரணைகளை அக்க ரைப்பற்றுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# முத்து நகர் விவசாயிகளின் காணி விவகாரத்தில் பிரதியமைச்சர் இரட்டை வேடம் போடுகிறாராம்!

## ஜனாதிபதி நேரடியாக தலையிட்டுத் தீர்வு வழங்கக் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

திருகோணமலை மாவட்ட முத்து நகர் விவசாயிகளின் காணி அபகரிப்புக்குட்பட்டதையடுத்து, இப்பகுதியின் பிரதியமைச்சர் இரட்டை வேடம் போட்டு வருகின்றார் என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளர் மிப்லால் மௌலவி குற்றம்சாட்டியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக முத்து நகர் விவசாயிகளின் காணி மீட்புக்கான சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இப் போராட்டக்காரர்களுடன் சந்திப்பை மேற்கொண்டு போராட்டத்துக்கு ஆதரவளித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மிப்லால் மௌலவி மேலும் கூறியவை வருமாறு:-

"இந்த மாவட்டத்தை சேர்ந்த பிரதியமைச்சர் அரசாங்கம் பக்கம் இருக்கும் போது ஒரு நிலைப்பாடு, மக்களின் பக்கம் இருக்கும் போது வேறு ஒரு நிலைப்பாடு என இரட்டை வேடம் போட்டு வருகிறார்.

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்கள் தற்போது அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். புல்மோட்டை தொடக்கம் குச்சவெளி மீனவர் பிரச்சினை, நில உரிமை விவகாரம் என தொடங்கிய போராட்டம் இப்போது முத்து நகர் வரை சென்றுள்ளது. கடந்த கால அரசியல் வாதிகள் பொய் வாக்குறுதிகளை வழங்கி முஸ்லிம் மக்களின் வாக்குகளை பயன்படுத்தி விட்டனர்.

தற்போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு முஸ்லிம் சமூகமே ஆதரவளித்தது. எனவே ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு முத்து நகர் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க வேண்டும். ஊழல், இனவாதம், போதைப்பொருள் தடுப்பு உள்ளிட்ட விடயங்களில் செயல்படும் அரசாங்கம், முத்து நகர் விவசாயிகளுக்கு நியாயம் வழங்க வேண்டும். கிழக்கு மாகாண சிவில் சமூகம், உலமாக்கள், பள்ளிவாசல்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

எதிர்வரும் ஜும்ஆ தொழுகையின் பின்னர் அனைத்து பள்ளிவாசல்களும் இணைந்து உலமா சபை வழியாக மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். மேலும் சுமார் 10 ஆயிரம் கையொப்பங்களைச் சேகரித்து ஜனாதிபதியிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்." - என்றார்.

இதற்கிடையில், முத்து நகர் ஒன்றிணைந்த விவசாய சம்மேளத்தின் செயலாளர் சகீலா சபூர் தீன் கூறுகையில்,"இருபதாவது நாளாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பல கஷ்டங்களுக்கு மத்தியில் எங்கள் விவசாய பூமியை மீட்டுத்தரக் கோரி போராடி வருகிறோம். பிரதமர் கூறிய பத்து நாள்களுக்குள் தீர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதியை இன்னும் நிறைவேறவில்லை.

இம் மாதம் 20ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. நெற்செய்கைக்கான காலம் நெருங்கி வருவதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கிறோம். எனவே எங்கள் விவசாய நிலங்களை மீளப் பெற்றுத் தர அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்," - என்றார்.

இந்தப் போராட்ட பந்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச் செயலாளர், கொழும்பு மாநகர உறுப்பினர் கே.ஏ. கலீலூர் ரஹ்மான் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# 20 தமிழ் மற்றும் சிங்கள ஜோடிகளுக்கு வவுனியாவில் நேற்றுத் திருமண நிகழ்வு

**(கி.வசந்தன்)**

வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரிசாட் பதியுதீனால் 20 தமிழ் மற்றும் சிங்கள தம்பதியினருக்கு பதிவு திருமணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா மாநகர சபை கலாச்சார மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இந்தத் திருமண நிகழ்வில் பத்து தமிழ் தம்பதியினரும் 10 சிங்கள தம்பதியினருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசாட் பதியுதீன், முத்துமுகமது மற்றும் மத குருமார் வவுனியா மாநகர மேயர், துணை மேயர் மற்றும் பிரதேச சபை தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# நாட்டைக் குட்டிச்சுவராக்கியோர் தண்டிக்கப்பட்டேயாக வேண்டும்

## ரிசாட் எம்.பி. வலியுறுத்துகின்றார்

(கி.வசந்தன்)

நாட்டைக் குட்டிச் சுவராக்கியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியா மாநகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று இருபது தமிழ் – சிங்கள தம்பதியினருக்கு பதிவு திருமணம் செய்து வைத்ததன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்–

கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நானும் பாதிக்கப்பட்ட ஒருவன். அதே போல் பலர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாடு குட்டிச் சுவராகியிருக்கிறது. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படவேண்டும்.

தூய விசாரணையின் பின் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் நானும் விருப்பத்தில் இருக்கிறேன். மாகாண சபை தேர்தல் நடத்தியே ஆக வேண்டும். அந்த தேர்தலை நடத்த வேண்டும் என்று ஜனநாயக கட்சிகள் எல்லாம் ஒன்று கூடி அரசாங்கத்துக்கு அழுத்தத்தை கொடுத்திருக்கின்றன..

அரசாங்கத்திடம் நாங்கள் வேண்டி இருக்கிறோம். மாகாண சபை தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை கொண்டு வருவதற்காக பிற்போடப்பட்டுள்ளது. அந்த திருத்தம் செய்வதாக இருந்தால் கால தாமதம் ஆகும் என்பதனால் பழைய முறையின் பிரகாரம் செய்வது சாத்தியமானது என்பதை அரசாங்கத்துக்கு வலியுறுத்தி இருக்கின்றோம். அவ்வாறு செய்வதாக இருந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ள இந்த அரசாங்கத்திற்கு இலகு. அரசாங்கம் அந்தப் பிரச்சனையை தீர்த்துக் கொள்வது மிக இலகுவாக இருக்கும். – எனத் தெரிவித்தார்.












# இன்றைய ராசி பலன்கள் - 08.10.2025



மேஷம்

இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது.



ரிஷபம்

இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.உன்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.

என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது என்னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.



மிதுனம்

சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வ–தற்கு போதுமானதாக இருக்கும்.



கடகம்

நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.



சிம்மம்

சில சமயங்களில் அமைதியின் மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமையான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை உங்களுக்கு கவலையை அளிக்கும்.



கன்னி

உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற்பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.



துலாம்

பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.



விருச்சிகம்

இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.10.2025




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்யம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

# கிழக்கில் வாழைச்சேனையில் ஐஸுடன் இளம் தம்பதி கைது!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் வைத்த 230 கிராம் ஐஸ் போதை பொருளுடன் 24 மற்றும். 23 வயதுடைய இளம் தம்பதிகள் இருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம். ஜறூஸ் தலைமையிலான பொலிஸார் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜறூஸ்க்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அவர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு அருகில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கல்குடாவில் இருந்து ஓட்டோவில் சென்ற தம்பதியினரைச் சுற்றி வளைத்து மடக்கிப் பிடித்தனர்.

அவர்களிடம் இருந்து 230 கிராம் ஐஸ் போதை பொருளை கைப்பற்றி, அவர்களைக்

கைது செய்தமையுடன் ஓட்டோ ஒன்றையும் மீட்டனர்.

மொறக்கொட்டான்சேனையில் இருக்கு ஒரு பிரதான போதைப்பொருள் வியாபாரி குறித்த தம்பதிகளிடம் கொழும்பில்



தாம் நாய்குட்டி ஒன்று வாங்கி இருப்பதாகவும் அதனை எடுத்துக் கொண்டுவந்து தருமாறும் அதற்கு கூலியாக 30 ஆயிரம் ரூபா பணம் தருவார் எனத் தெரிவித்து முற்பணமாக 15 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து தம்பதிகள் கொழும்புக்கு ரயிலில் சென்றனர். அங்கு புறக்கோட்டை பகுதியில் வைத்து பெண் ஒருவர் நாய்குட்டி ஒன்றையும் ஒரு பையையும் தம்பதியிடம் வழங்கினர். அவர்கள் பஸ் ஒன்றில் கல்குடாவில் உள்ள அவர்களது வீட்டுக்குத் திரும்பியுள்ளனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் மாலை மொறக்கொட்டாஞ்சேனையில் உள்ள போதை வியாபரியிடம் தாங்கள் கொழும்பில்இருந்துவாங்கிகொண்டுவந்த நாய்க்குட்டி மற்றும் பையைக் கொண்டு சென்று கொடுப்பதற்காக ஓட்டோவில் பயணித்து கொண்டிருந்த போது பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும், தாங்கள் சம்பந்தப்பட்ட பையை திறந்து கூடப் பார்க்கவில்லை எனவும், அதில் போதை பொருள் இருப்பது தங்களுக்கு தெரியாது எனவுன் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டது.

கைது செய்யப்பட்ட இளம் தம்பதிகளை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்காக நீதிமன்ற உத்தரவை பெறும் நடவடிக்கையில் தாங்கள் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.